# கழுகின் சத்தம்

## மார்ச் 11, 2024



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# தேவனோடு தனிமையாக வாருங்கள்,
# இரக்கத்தின் பனித்துளிகள் அமைதியாக
# இருக்கும் உங்கள்மேல் விழட்டும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: ஒரு மறைக்கப்பட்ட ஜீவியம், அக்டோபர் 6, 1955, பத்தி எண் 44, 45

*44. இப்பொழுது, கவனியுங்கள், முதலாவது காரியம் என்னவென்றால் புத்துணர்ச்சியாக இருந்தது தான். அந்த விதையை எது வளரச் செய்கிறது?*

*நீங்கள் எப்பொழுதாவது காலையில் எழுந்து, வானத்திலிருந்து கீழே விழுந்து, பூமியைப் புதுப்பிக்கும் பனித்துளியைப் பார்த்ததுண்டா? அது எப்படி அதைப் புதுப்பிக்கிறது? அது அமைதியாக இருக்கும்போது தான்.*

*பனித்துளிகள் பகல் நேரத்தில் விழுவதில்லை. எல்லாமே அமைதியாக இருக்கும்போது, பனித்துளிகள் இரவு நேரத்தில் தான் விழுகிறது.*

என்னுடைய சகோதரனே, நீங்கள் பயங் கரமாக சண்டையிட்டுக்கொண்டும், வாக்கு வாதம் செய்துகொண்டும், இங்கே இந்த பூமியின் மேலுள்ள காரியங்களைக் குறித்து பதட்டமடைந்து கொண்டும் இருக்கும் காலம் வரையில், பனித்துளிகள் ஒருபோதும் உங்கள் மேல் விழ முடியாது.

தேவனோடு தனிமையாக வாருங்கள், இரக்கத்தின் பனித்துளிகள் அமைதியாக இருக்கும் உங்கள்மேல் விழட்டும்.

விலையேறப்பெற்ற நினைவுகள், எப்படி யாக அவைகள் தங்குகின்றன, அவைகள் எப்பொழுதும் எப்படியாக எனது ஆத்து மாவை நிரப்புகின்றன; நள்ளிரவின் அமைதி யில், இரகசியங்கள் திறக்கப்படுகின்றன.

தேவன் எப்படியாக தம்முடைய விசுவா சியை தானாகவே தனிமையாக இருக்கும் அவனைச் சுற்றிலும் விழுகிற திரைச்சீலை

யோடு பெற்றுக்கொள்ள முடிகிறது, அவர் வானத்திலிருந்து வரும் புத்துணர்ச்சியைக் கீழே கொண்டு வருவார், அங்கே வேறெந்த நபரும் கிடையாது, அல்லது உலகத்தில் அதை எப்பொழுதாவது அறிந்து கொள்வ தற்கு வேறு வழியே கிடையாது, அங்கே யிருப்பது அவன் மாத்திரமே.

*45. நீங்கள் எப்பொழுதாவது காலையில் அந்த உண்மையான புத்துணர்ச்சியில், சில் லென்ற உணர்ச்சியோடு வெளியே நடந்திருக் கிறீர்களா?*

*தேவன் தமது பூமியை புத்துணர்ச்சி யாக்கியிருக்கிறார்.*

*நறுமணம், நீங்கள் எப்பொழுதாவது ஒரு ரோஜா மலர் தோட்டத்திற்குள் போயிருக்கி றீர்களா?*

என்னுடைய இடத்தில், அவர்கள் நிறைய ஒரேவிதமான செடிகளைப் (*honeysuckles*) பெற்றிருக்கிறார்கள்.

அந்த ஒரேவிதமான செடிகள் பகலின் உஷ்ணத்தில் அதிகமாக நெடுகிலும் வாசனை வீசுவதில்லை.

ஆனால் அதிகாலையில், எல்லா காற்றும் சுத்தமாக இருக்கும் போது தான் அதில் வாசனை வீசுகிறது, அதன்பிறகு அந்த ஒரே விதமான செடிகளுடைய அந்த நறுமணம்...

ஒரு மனிதன் வெளியிலிருந்து வம்பு செய்துகொண்டும், சண்டையிட்டுக் கொண் டும், பதட்டமடைந்து கொண்டும் இருக் கட்டும், அப்போது நீங்கள் சுவிசேஷத்தைக் குறித்து அதிலிருந்து ஒருபோதும் அதிக நறு மணத்தைப் பெற்றுக்கொள்ள மாட்டீர்கள், ஆனால் அவன் ஒருவிசை தேவனுடைய அமைதிக்குள் தனிமையாக வரட்டும்.


பிரசங்க பீடத்திற்கு வருகிற ஒவ்வொரு மனிதனும் முதலில் தனிமையில் வாசம் செய்தாக வேண்டும்.

அதன்பிறகு கனிகள் வருகின்றன, அது அதனுடைய கனிகளைக் கொடுக்கின்றது.

தேவனுடைய பிரசன்னத்தில், இந்த மகத்தான இரகசிய இடத்தில் தங்கியிருந்து, மறைந்து கொள்ளும் ஒவ்வொரு மனிதனும் சமாதானம், அன்பு, சந்தோஷம், நீடிய பொறுமை, நற்குணம், தயவு, அமைதியாகிய நீதியின் கனிகளைக் கொடுப்பான்.

இந்த மற்ற காரியங்களைக் குறித்து முறையிட வேண்டாம். உங்களுடைய ஜீவி யத்தில் அதைப் பெற்றுக்கொள்ளுங்கள், புத்திர சுவிகாரத்தின் அந்த தேசத்திற்குள் நீங்கள் தேவனோடு மறைந்து கொள்ளும் மட்டுமாக நீங்கள் ஒருபோதும் அதைப் பெற்றுக்கொள்ளவே மாட்டீர்கள்.





ஒரு கிறிஸ்தவன் இருக்கவேண்டிய ஒரு
பரிபூரண விசுவாசத்தில் நாம்
ஜீவிப்போமானால், நாம் இந்த உலகிற்கு ஒரு
விந்தையாகவே, அறியாப் பொருளாகவே
இருப்போம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: பரிபூரண விசுவாசம், ஆகஸ்டு 25, 1963

*__112.__ ஆனால் இயேசு ஒரு வினோதமான ஆளாக, ஒருவரும் அறியாத ஒரு உலகில் வாழ்ந்து வந்தார்.*

*அவர் பரிபூரண விசுவாசம் கொண்டுள்ள ஒரு உலகில் வாழ்ந்து வந்தார்.*

**ஒரு கிறிஸ்தவன் இருக்கவேண்டிய ஒரு பரிபூரண விசுவாசத்தில் நாம் ஜீவிப்போமானால், நாம் இந்த உலகிற்கு ஒரு விந்தையாகவே, அறியாப் பொருளாகவே இருப்போம்.**

*ஜனங்கள் உன்னைப் புரிந்து கொள்ள மாட்டார்கள்.*

*நீ ஆவியிலே நடப்பாய்.*

~ 3 ~


ஆவியானவர் சொல்லுகிறதையே நீ செய்வாய்.

அவர் எதைச் செய்ய வேண்டாம் என்று சொல்லுகிறாரோ, அதைச் செய்ய மாட்டாய்.

அப்பொழுது ஜனங்கள் சொல்ல ஆரம்பிப்பார்கள்... நீ அவர்களுக்குப் புரியாத ஒருவனாக, வினோதமானவனாக இருப்பாய்.



# சுவிசேஷத்தின் ஊழியக்காரர்களே, நாம் இந்த பெரிய கூட்டங்களையும் (campaigns) ஜனங்களுடைய கைதட்டல்களையும் கவனிக்க வேண்டாம்; உங்களுடைய கண்களை எஜமானர் மேலேயே வைத்திருங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும், ஜூன் 19, 1958, Para 52, 53

*உங்கள் சகோதரனாக, உங்களை நேசிக்கிற ஒருவனாக, இப்பொழுது இங்கிருந்து போவதற்கு முன்பாக, இந்தக் கருத்தை சற்று நினைவில் கொள்ளுங்கள்.*

*கொஞ்ச காலத்திற்கு முன்பு, அங்கே ஒரு மகத்தான மனிதன் இருந்தான், அவன் கைதேர்ந்த நிபுணனாக விளங்கிய ஒரு வாலிபனாக இருந்தான்.*

*ஓ, அவனால் எப்படியாக இசைக் கருவியை வாசிக்க முடிந்தது.*

*அவன் அப்படியே தன்னுடைய இசையைக் கொண்டு, உலகத்தை நிரப்பிக் கொண்டிருந்தான்.*

அவன் அதனுடைய ஒரு மகத்தான கலைஞனாக இருந்தான்.

எனவே ஒரு இரவில், ஒரு குறிப்பிட்ட தேசத்தில், இங்கிலாந்து தேசத்தில், அநேக ஆயிரக்கணக்கான ஜனங்களை பொழுது போக்குவித்துக் கொண்டிருந்தான்.

சுற்றிலும் எல்லாவிடங்களிலும், அவர்கள் இந்த மகத்தான கைதேர்ந்த நிபுணனைப் (பார்த்து) மிகவும் திகைத்துப் போனார்கள். அந்த ஜனங்கள்...

அவன் தன்னுடைய கச்சேரியை, அல்லது அவனுடைய இசையை இசைத்த பிறகு, அவர்கள் கூச்சலிட்டு, தங்கள் கரங்களைத் தட்டினார்கள், மிகவும் உணர்ச்சிவசப்பட்டு அவ்வாறு செய்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் அந்த வாலிபனோ அவர்க ளுடைய கைதட்டலின் பேரில் எந்த கவன மும் செலுத்தாமல், தொடர்ந்து மேலே

நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பதை அவர்கள் கவனித்தனர்.

53. அவர்கள் - அவர்கள், அவனுடைய - அவனுடைய இசையை பாராட்டி, அவன் ஒரு மேதை என்று அவன் அறிந்து கொள்ளும்படி செய்ய அவர்களால் எவ்வளவு சத்தமிட முடியுமோ அவ்வளவு உரத்த சத்தமாக, கூச்சலிட்டுக் கொண்டும், ஓ, அப்படியே தொடர்ந்து செய்து கொண்டும் இருந்தார்கள்.

ஆனால் அவனோ தொடர்ந்து மேலே நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான்.


அவன் எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று அவர்களுக்கு வியப்பாயிருந்தது.

ஆனால் மேலே பால்கனியின் உச்சியில், வயதான குருவாகிய ஆசிரியர் அங்கே மேலே ஏறிப்போயிருந்தார்; அந்தக் குருவாகிய ஆசிரியர் அதைக் குறித்து என்ன

*சொல்லப் போகிறாரோ என்றே அவன் வியந்தவனாக அவன் தன்னுடைய கண்ணை வைத்திருந்தான்.*

**அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று அவன் கவலைப்படவில்லை; அந்த ஆசிரியர் என்ன கூறுவார் என்றும், அந்த வயதான குருவாகிய ஆசிரியர் என்ன கூறுவார் என்பதைக் குறித்தே அவன் அக்கறை கொண்டான்.**

**சுவிசேஷத்தின் ஊழியக்காரர்களே, நாம் இந்த பெரிய கூட்டங்களையும்** (campaigns) **ஜனங்களுடைய கைதட்டல்களையும் கவ னிக்க வேண்டாம்; உங்களுடைய கண்களை எஜமானர் மேலேயே வைத்திருங்கள்.** *அந்த நாளில் நம்மை உயிர்த்தெழச் செய்யக் கூடிய ஒரே ஒருவர் அவர் தான்.*




துன்புறுத்தல் கிறிஸ்தவனை அசைத்து, அவன் அதிகமாக ஜெபிக்க அவனை ஊக்குவித்து, புயல்களையும் தாங்கும் அளவிற்கு அவனை ஆழமாகப் பதியச் செய்கிறது
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-04-22 மணவாட்டி மரம் திரும்ப அளிக்கப்படுதல்

*141. நீங்கள் பழமையான பெரிய மரத்தைக் காண்பீர்களானால்...*

*நான் சிறுவனாயிருந்தபோது, மற்ற பையன் களுடன் வெளியே செல்வது வழக்கம். அங்கு பழமையான பீச் மரம் (Peach Tree) ஒன்றின் கீழ் உட்காருவோம்.*

*மரத்தை வேரோடு பிடுங்கிவிடும் அள விற்கு காற்று பலமாக அடிக்கும்.*

*ஆனால் ஒவ்வொருமுறை காற்று பலமாக அடிக்கும்போதும், அது மரத்தை அசைத்து, வேர்களைத் தளரச் செய்து, அந்த வேர்கள்*

*இன்னும் ஆழமாகச் சென்று மரத்தை உறுதி யாகப் பிடித்துக்கொள்ள உதவும்.*

***142.*** *அப்படித்தான் கிறிஸ்தவனைப் பார்த்து மற்றவர்கள் கேலி செய்தலும் அமைந்துள் ளது.*

**துன்புறுத்தல் கிறிஸ்தவனை அசைத்து, அவன் அதிகமாக ஜெபிக்க அவனை ஊக்கு வித்து, புயல்களையும் தாங்கும் அளவிற்கு அவனை ஆழமாகப் பதியச் செய்கிறது.**

# நாம் மறுபடியும் பிறக்கும் போது, கிறிஸ்துவினுடைய ஜீவனின் கனிகள் நம்மைப் பின்தொடருகின்றன



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும், ஞாயிறு காலை, டிசம்பர் 31, 1961

*187. நீங்கள் மறுபடியும் பிறக்கும் போது, தேவன் உங்களை நிரூபிக்கிறார்.*

*அவ்வாறு தான் தேவன் தம்முடைய இயற்கை எல்லாவற்றையும் நிரூபிக்கிறார்.*

*எதைக்கொண்டு? அவர்களுடைய கனி களைக்கொண்டு.*

*அந்தவிதமாகத்தான் அவர் தம்முடைய ஊழியத்தை நிரூபிக்கிறார். அது சரியே.*

*அவருடைய ஊழியக்காரர்கள் எல்லாரும் அவர் இயற்கையை நிரூபிக்கிற அதேவித மாகவே நிரூபிக்கப்படுகிறார்கள்.*

அது ஒரு பீச் மரம் என்று நீங்கள் எவ்வாறு அறிந்து கொள்கிறீர்கள்? காரணம் என்னவென்றால், அது பீச் பழங்களைக் *(peaches)* கொடுக்கிறது.

அது ஒரு ஆப்பிள் மரம் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? அது ஆப்பிள் பழங்களைக் கொடுக்கிறது.

அது ஒரு கிறிஸ்தவன் என்று நீங்கள் எப்படி அறிந்து கொள்கிறீர்கள்? கிறிஸ்தவனுடைய அடையாளங்கள் அதிலிருந்து பிறப்பிக்கப்படுகிறது, கிறிஸ்தவ ஜீவியம் அதிலிருந்து வருகிறது.

அவர் ஒரு போதகர் என்று நீங்கள் எப்படி அறிந்து கொள்கிறீர்கள்? வார்த்தை அவரிடமிருந்து வருகிறது.

அவன் ஒரு தீர்க்கதரிசி என்று உங்களுக்கு எப்படி தெரிகிறது? வார்த்தை அவன் மூலமாக வந்து, சாட்சி கொடுக்கிறது, மெய்ப்பித்துக் காட்டுவது.

*அது தன்னைத்தானே நிரூபிக்கிறது.*

*அது எப்படி அவ்விதம் ஆகிறது? அது மரிக்கும் போது, அதுவாக ஆகிறது. அது சரியே.*

*நாம் மரித்து, கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரு புது சிருஷ்டியாக ஆகும் போது, அது நம்முடைய அழைப்போடு நம்மிடம் வருகிறது, நாம் நம்முடைய அழைப்பில் தரித்திருக்கிறோம்.*

*நாம் அவருடைய ஊழியக்காரரர்களாக இருக்கும்போது, ஆவியின் கனிகள் நம்மைப் பின்தொடருகின்றன.*

*நாம் மறுபடியும் பிறக்கும் போது, கிறிஸ்துவினுடைய ஜீவனின் கனிகள் நம்மைப் பின்தொடருகின்றன. அது சரியே.*

*அது ஒரு பீச் மரம் என்று உங்களுக்கு எப்படி தெரிகிறது? அதில் பீச் கனிகள் (peaches) உள்ளன.*

அவன் ஒரு கிறிஸ்தவன் என்று நீங்கள் எப்படி அறிந்து கொள்கிறீர்கள்? அவன் கிறிஸ்துவைப் போன்று செயல்படுகிறான், அவன் கிறிஸ்துவைப் போன்று நடந்து செல் கிறான், அவன் கிறிஸ்துவைப் போன்று பேசு கிறான், அவன் கிறிஸ்துவைப் போன்று பாவத்திற்கு மேலாக வெற்றியோடு ஜீவிக் கிறான்.

அவன் என்ன செய்கிறான், 'நான் என்ன செய்திருக்கிறேன் என்று பாருங்கள்' என்று கூறலாம். கிறிஸ்து அவ்விதம் செய்யவில்லை. அவர் எல்லா துதியையும் பிதாவுக்கே கொடுத்தார். அது சரியே. அவ்வாறு தான் நீங்கள் அதை அறிந்து கொள்கிறீர்கள். அவர் களுடைய கனிகளினாலே, நீங்கள் அவர் களை அறிந்து கொள்வீர்கள்.





# கழுகின் சத்தம்

## மார்ச் 11, 2024



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய

செய்திகளிலிருந்து